Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.55/2026

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.எட்வின்ராஜா | Occupation | தலைமை காவலர் |
| Father's name | ராமர் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

20.05.2026

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர் போக்குவரத்து காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.08.2025 அன்று மல்லி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியிலிருந்தபோது காலை 10.30 மணியளவில் நானும் சார்பு ஆய்வாளர் ரகுபதி மற்றும் தகா152 ஆகியோரும் மதுவிலக்கு சம்மந்தமாக எங்கள் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோந்து மேற்கொண்டபோது பூவநாதபுரம் விலக்கின் அருகிலுள்ள டாஸ்மாக் அருகே ரோந்து சென்றபோது ஈஸ்வரன் மகன் சுப்பிரமணியன் என்பவர் அதிக லாபத்திற்காக மதுபான பாட்டில்களை விற்றுக்கொண்டிருந்தார். அவரிடமிருந்து 30 மதுபான பாட்டில்களை கைப்பற்றி காவல்நிலையம் அழைத்து வந்தோம். பின்னர் சம்பவயிடத்தில் வைத்தே அத்தாட்சி தயார் செய்து போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்தோம். பின்னர் எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களை காவல்நிலையம் எடுத்து வந்து சார்பு ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

சம்பவயிடமானது மல்லி காவல்நிலையத்திலிருந்து 8 கிலோமீட்டர் தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்திலிருந்து சம்பவயிடத்திற்கு 11.00 மணிக்கு சென்றோம் என்றால் சரிதான். ஆனால் எந்த வாகனத்தில் சென்றோம் என்பது பற்றி அத்தாட்சி மற்றும் எனது வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் அருகே அரசு மதுபானக்கடை உள்ளது என்றாலும் அதனால் அவர்களை மீறி அதன் அருகே யாரும் மதுபானம் விற்க முடியாது என்றாலும் அவ்வாறு விற்றிருந்தால் அவர்களே புகார் கொடுத்திருப்பார்கள் என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவயிடத்திற்கு நாங்கள் சென்றபோது எதிரியிடம் எத்தனை நபர்கள் மதுபானம் வாங்கினார்கள் என்றால் சார்பு ஆய்வாளர் தான் எங்களுக்கு முன்பு சென்றதால் அதுபற்றி அவருக்கு தான் தெரியும்.

சம்பவயிடத்திலிருந்து ஓடிய நபர்களில் எதிரிதான் மதுபானம் விற்றார் என்பது பற்றி எவ்வாறு தெரிந்துகொண்டோம் என்றால் எதிரியின் மீது ஏற்கனவே முன்வழக்குகள் இருப்பதால் அவர்தான் மதுபானம் விற்றார் என்று சார்பு ஆய்வாளர் எங்களிடம் கூறியதால் நாங்களும் அவர்தான் எதிரி என்று முடிவு செய்தோம். எதிரி நின்றுகொண்டிருந்ததாக கூறப்படும் இடத்தின் அருகே கிடந்த காலி பாட்டில்கள், டம்ளர்கள் போன்றவை கைப்பற்றப்பட்டதா என்றால் அவை கைப்பற்றப்படவில்லை. நாங்கள் பார்வையிட்டோம். மேற்படி 30 மதுபானபாட்டில்களில் எத்தனை பாட்டில்கள் திறந்த நிலையிலிருந்தது என்றால் அனைத்துமே மூடிய நிலையில்தான் இருந்தது.

எதிரியிடமிருந்து பணம் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. மேற்படி பாட்டில்களை எதிரி எந்த கடையிலிருந்து வாங்கினார் என்பது பற்றி விசாரித்தோமா என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். இவ்வழக்கில் தயார் செய்யப்பட்ட பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் நானும், தகா.152 செந்தில் என்பவரும் கையெழுத்து செய்தோம். எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் சார்பு ஆய்வாளர் காவல்நிலையத்தில் வைத்து வாங்கியிருக்கலாம். சம்பவயிடத்தில் எத்தனை நபர்களை விசாரணை செய்தோம் என்றால் சம்பவயிடத்தில் யாருமில்லை அனைவரும் ஓடிவிட்டார்கள். சம்பவயிடத்தில் யாரும் இல்லாததால் நாங்களாகவே அத்தாட்சியில் சாட்சிகளாக முடிவு செய்து கையெழுத்து செய்தோம்.

அத்தாட்சியில் எதிரி கையெழுத்து செய்தாரா என்பது பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் சம்பவயிடம் சென்று இவ்வழக்கு சம்பவம் பற்றி ஆவணங்கள் தயார் செய்து அந்த இடத்திலிருந்து கிளம்பும்போது மணி 11.30 இருக்கும். எதிரியை எவ்வாறு காவல்நிலையம் அழைத்து வந்தோம் என்பது பற்றியும் மேற்படி மதுபான பாட்டில்களை எவ்வாறு காவல்நிலையம் எடுத்துவந்தோம் என்பது பற்றியும் அத்தாட்சியிலும் எனது வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளோமா என்றால் அத்தாட்சி மற்றும் வாக்குமூலத்தில் குறிப்பிடப்படவில்லை. சார்பு ஆய்வாளர் தயார் செய்து கொடுத்த வாக்குமூலத்தில் நான் கையெழுத்து மட்டும் செய்து கொடுத்தேன்.

எதிரியை எந்த ஆவணத்தின் அடிப்படையில் கைது செய்தார்கள் என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றால் அதுபற்றி சார்பு ஆய்வாளருக்கு தான் தெரியும். அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. அத்தாட்சியில் சார்பு ஆய்வாளர் கேட்டுககொண்டதற்கிணங்க நான் கையெழுத்து செய்துகொடுத்தேன் என்றால் சரிதான். நான் சார்பு ஆய்வாளருடன் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றாலும் எதிரி மீது ஏற்கனவே வழக்குகள் உள்ளதால் சார்பு ஆய்வாளர் தாக்கல் செய்த வழக்கிற்காக தற்போது பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் செல்போன் எதுவும் கைப்பற்றப்பட்டதா என்றால் இல்லை. எதிரியை சம்பவயிடத்தில் வைத்து புகைப்படம் எடுத்தோமா என்றால் இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.